# சித்தர்களின் சமுதாய நோக்கு

***செ. சத்யா***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
மயிலம்

**மலர்: 4**

**இதழ்: 2**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

### முன்னுரை

மனத்தூய்மையை மலிவான விலைக்கு விற்று, புறத்தூய்மையை மட்டும் பொலிவுடன் வைத்துக்கொள்ளும் வாழ்க்கை தேவையா? எனத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டு தெளிவடையும் பக்குவம் மனிதனுக்கு அவசியம். எனவே, அறத்தோடு வாழும் கலையை எளிய பாடல்களில் விளக்கி, பிறரின் நலன்களை மட்டுமே மனதில் வைத்து சேவை செய்த சித்தர்களைப் பற்றியும், அவர்களின் பாடல்களில் சமுதாய நோக்குச் சிந்தனைகள் எவ்விதம் இடம்பெற்றுள்ளன என்பதை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

### சித்தர்களின் குறிக்கோள்

சித்தர்கள், இந்த உலகத்திலுள்ள பொருளியல்சார் வாழ்க்கை நெறிகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள். தாங்கள் எண்ணிய ஒரு இலக்கை நோக்கிச் சென்று அதன் பயனை அறிந்து ஆனந்தம் கொள்பவர்கள். சித்தர்கள் தங்களின் நோக்கங்களை ஒரு எல்லைக்குள்ளேயே நிறுத்திக்கொண்டு முடங்கிவிடாமல், மேலும் மேலும் கடந்து சென்று புதியபுதிய அனுபங்களைப் பெற்று ஆனந்தம் அடைபவர்களாகக் காணப்படுகிறார்கள்.

**"பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு**
**இதமுற்ற பாச இருளைத் துறந்து**
**மதமற்று எனதுயான் மாற்றிவிட்டு ஆங்கே**
**திகமுற் றவர்கள் சிவசித்தர் தாமே"**

என்னும் திருமந்திரப் பாடல், மூன்று புறச்சமய நெறிகள் பழுதானவை எனக் கண்டறிந்து, அவற்றின் நெறிமுறைகளைக் கைவிட்டு, பாசம் என்னும் செருக்குகளையும் கழியவிட்டு, இதமான வழிமுறைகளைக் கண்டறிந்து அவ்வழியைப் பின்பற்றத் தொடங்கியவர்கள் 'சித்தர்கள்' என்கிறது.

**சித்தர்களும் சமுதாயமும்**

சமுதாய நெறிமுறைகள் என்னும் இலக்கண வரையறைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் சித்தர்களின் நெறிகளில், சமுதாயத்தின் சீர்திருத்தத்தில் சித்தநெறிக்கு என்றொரு தனித்த இடம் இருக்கின்றது.

"மருந்து, மந்திரம், யோகம் முதலியவற்றால் உயர்ந்த இவர்கள் மருந்து, மந்திரம் முதலியன கண்ட காரணத்தால் இவர்களைப் புதியன கண்டோர் எனலாம். சாதி, மதம், சமயம், சடங்கு முதலியனவற்றைச் சாடியவர்கள் ஆதலால் இவர்களைச் சமுதாயச் சீர்திருத்த வாதிகள் எனலாம். சித்தர்கள், சமுதாயத்திற்காகப் புதியன கண்டறியும் சீர்திருத்தவாதிகள் என்பதால், அவர்களையும் இச்சமுதாயத்தின் அங்கமாகவே கருதலாம்.

சித்தர்கள் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து மூடநம்பிக்கைகளுக்கு இடந்தராதவர்கள். சடங்குகளையும், சடங்குகளோடு தொடர்புடைய வழிபாடுகளையும் ஏற்காதவர்கள். தங்கள் வாழ்க்கையில் கண்டறிந்த உண்மைகளைத் தெளிவாக எடுத்துரைப்பதுவே இவர்களின் நோக்கம். இவர்கள் தத்துவ ஞானிகள், மெய்ஞ்ஞானிகள், யோகிகள், மருத்து வர்கள் எனும் சிறப்புப் பெற்றவர்களாக இருந்துள்ளனர்.

சித்தர்கள் தாம் இயற்றிய பாடல்கள் மூலம் சமுதாயத்தைச் சீரழிக்கும் சாதி, சாத்திரம், சமயம் போன்ற பாகுபாடு களைச் சாடினார்கள். சித்தர்கள் கடவுள் மறுப்பாளர்கள் அல்லர். "மனித குலம் ஒன்று: தேவனும் ஒன்றே" என்றார்கள்.

எல்லாம் கடந்த கடவுளை எந்த அளவுகோல் கொண்டும் யாராலும் கணிக்க இயலாது. ஆதலால், திருமூலர், "ஆருயிர் மக்களே! முனம் கவர்ச்சிக் காட்சிகளால் சிதறிப்போய் ஒருமைக்கொள்கை சிதைந்து விடக்கூடாது. மக்கள் குலம் பிரிக்கக்கூடாத ஒன்றே என்பதையும், கடவுள் கற்பனைக் பேச்சுக்கள் கடந்த ஒருவனே என்பதையும், நம்பிக்கையுடன் நன்றாக நினைத்து வாழ்வில் கடைபிடியுங்கள். மனமொன்றி இக்கொள்கையில் வாழ்ந்தால் நீங்கள் இறப்பறுப்பீர்கள். உங்களை எமனும் அண்ட மாட்டான். நீங்கள் எந்தப் பொய்களையும், தீய செயல்களையும் கண்டு நாணப்படாமலே இறைவன் அருளும் பேரின்பத்தை அவனிடம் சென்று பெறலாம் என்பதனை,

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புதும்கதி யில்லை நும்சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே"**

என்ற பாடலடிகள் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

அகத்தியர் "ஞான காவியம்" என்னும் தனது நூலில் மனிதன் வாழும் முறை எவ்வாறு இருக்க வேண்டும் எனத் தெளிவாக விளக்கியுள்ளார்.

***"காணடா புலத்தியனே காமுகர்க்கு***
***கழுதையென்ற கருமிகட்குப் பலிதமில்லை.***
***தாணடா இருந்தபடி உலகோர்க்கு***
***நல்வினை கண்டிருப்போர்க்கு அதீதசித்தி"***

அதாவது, இந்நூலில் செய்யக் கூடாதவற்றினைத் தவிர்த்து அற நியமத்தின் படி வாழ வேண்டும் என்கிறார்.

சித்தர் சிவவாக்கியரும் சாதி, சமய வேறுபாடுகளைக் கடுமையாக சாடியுள்ளார். மேலும், இவர் ஆண், பெண் என இருசாதிகள் மட்டுமே உள்ளன. மற்றவை வீண்சாதிகளாகும் எனச் சாதி, பேதத்தை முழுமையாக வெறுக்கும் வகையில் கருத்தினை முன்வைத்துள்ளார்.

***"ஆண்சாதி பெண்சாதி ஆகும் இருசாதி***
***வீண்சாதி மற்றவெல்லாம் – குதம்பாய்***
***வீண்சாதி மற்றவெல்லாம்"***

இப்பாடலில், ஆண், பெண் ஆகிய இரு சாதிகளைத்தவிர ஏனைய சாதிகள் அனைத்தும் வீணானவை என்றும், சாதி, மத வேறுபாடு இல்லை என்றும் குறிப்பிடுகிறார்.

மேலும், அகப்பேய் சித்தர், காகபுசுண்ட சித்தர், பாம்பாட்டிச் சித்தர் ஆகியோர் அறவாழ்வின் முக்கியத்துவத்தினையும், சாதி வேறுபாட்டினையும், ஆண், பெண் சமத்துவத்தினையும் போற்றிப் பேணும் வகையில் பல பாடல்களை பாடி சமூகத்தை சீர்திருத்த முயன்றுள்ளனர்.

அகப் பேய்ச் சித்தர் கூறுகையில்,

**"சாதி பேதமில்லை அகப்பேய்**
**தானாகி நின்றவர்க்கே**
**ஓதி உணர்ந்தாலு அகப்பேய்**
**ஒன்றுந்தான் இல்லையடி"**

என்றும்,

காசுபுசுண்டர் சித்தர் கூறுகையில்,

**"காணப்பா சாதிகுலம் எங்கட்கில்லை"**

என்றும்,

பாம்பாட்டிச் சித்தர் கூறுகையில்,

**"சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்**
**சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்**
**வீதிப் பிரிவினிலே விளையாடுவோம்"**
**"சமயபேதம் பலவான சாதிபேதங்கள்**
**சகத்தோர்க்கே அல்லாதுசற் சாதுகளுக்கோ"**

என்றும்,

கொங்கணச் சித்தர் கூறுகையில்,

**"சாதி பேதங்கள் சொல்லுகிறிர் தெய்வம்**
**தூனென் றொருவுடல் பேதமுண்டோ"**

என்றும்,

சிவவாக்கியர் கூறுகையில்,

**"சாதி ஆவது ஏதடா சலந்திரண்ட நீடிரலாம்**
**.................................................................**
**சாதிடீபதம் ஓதுகின்ற தன்மை என்னதன்மைடீயா"**
**"போதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகள்**
**சாதிபேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே"**

என்றும்,

பட்டினத்தார் கூறுகையில்,

**"சாதியில் கூடுவாரோ ஃ சாத்திரத்துக்கு உள்ளாமோ**
**ஓதி உணர்ந்ததெல்லாம் உள்ளபடி ஆச்சுதடி"**
**"கஞ்சாப்புகை பிடியாதே - வெறி**
**காட்டி மயங்கிய கட்குடியாதே!"**
**அஞ்சவுயிர் மடியாதே - பத்தி**
**அற்ற அஞ்ஞானத்தில் நூல் படியாதே...!"**

என்றும் கூறி சாதிப் பிரிவினைகளுக்கு முற்றுப்புள்ளிவைத்துசமூகநல்லிணக்கத்தை வலியுறுத்துவதனைக் காணலாம். அதாவது, இன, மத, சாதி, குல வேறுபாடு பார்த்தல் தவறானது என்பது சித்தர்களது கருத்தாக அமைகின்றன. மேலும், சித்தர்கள் பாடலில் தனிமனித அறத்தினை வலியுறுத்துகின்ற பாங்கும் புலப்படுகிறன்றது. அறம் ஓங்கும் போதும், சமூகம் மேன்மையடைகின்றது.

மேலும், சித்தர்கள், போலிகளைச் சாடியுள்ளதை பின்வரும் பாடலை வரிகள் மூலம் அறிய முடிகின்றது. அவை,



**"பாரப்பா சீடர்களை அழைப்பான் பாவி**
**பணம்பறிக்க உத்தேசம் பகர்வோ என்பான்**
**ரப்பா பிரமநிலை காட்ட மற்றான்**
**காசப் பொய்களையும் அன்றோ சொல்வான்**
**நேர்ப்பா சீடனுக்குப் பாவமாச்சு**
**நிட்டை சொல்லுங் குருக்களுக்குத் தோடமாச்சு**
**வீரப்பா அடக்குகின்ற இடத்தைப் பாரான்**
**விதிபோல முடிந்ததென்று விளம்புவானே"..**

என்று எடுத்துரைத்துள்ளார். இத்தகைய போலித் துறவிகளின் மாய வித்தைகண்டு மனதைப் பறி கொடுக்க வேண்டாம் என்பதே சித்தர்களது அறிவுறுத்தல். இத்தகைய வேடதாரிகளை இனங்கண்டு

கொள்ள வேண்டும் என்பதற்காக பட்டினத்தார்,

**"பேப்போல திரிந்து பிணம்போல் கிடந்து இட்ட பிச்சையெல்லாம்**
**நாய்போல் அருந்தி நரி போல் உழன்று நன் மங்கைரைத்**
**தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லி**
**சேய்போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே"**

என்று மெய்ஞ்ஞானிகளின் இலக்கணத்தைக் எடுத்துரைக்கின்றார்.

## ஆய்வு முடிவுரை

சித்தர்கள் தாம் இயற்றிய பாடல்கள் மூலம் சமுதாயத்தைச் சீரழிக்கும் சாதி, சாத்திரம், சமயம் போன்ற பாகுபாடு களைச் சாடினார்கள். சித்தர்கள் கடவுள் மறுப்பாளர்கள் அல்லர். மனித குலம் ஒன்று: தேவனும் ஒன்றே" என்றார்கள்.

"மக்கள் குலம் ஒன்று அதில் உயர்வு தாழ்வு இல்லை" என்ற அடிப்படைக் கோட்பாட்டை சித்தர்கள் வலியுறுத்தினார்கள்.

மூடப் பழக்கவழக்கங்களைக் கடுமையாக சாடியுள்ளனர். சித்தர்களின் பாடல்கள் இனம், மதம், சாதி, ஆண், பெண் எனும் வேறுபாடுகளைக் கடந்து சமூக நல்லிணக்கத்தினை மையப்படுத்தியே அமைந்துள்ளன. தீண்டாமை, அறவாழ்வின் முக்கியத்துவம், சமய ஒருமைப்பாடு என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதனை அறிய முடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ), திருமூலர் திருமந்திரம்.
2. இரத்தின நாயக்கர், (1947), பதிணென் சித்தர் ஞானக் கோவை.
3. மாணிக்கவாசகன், ஞா., (தொகுப்பு), லெட்சுமணன், இரா., (பதிப்பு), (2007), சித்தர் பாடல்கள், உமாபதிப்பகம், சென்னை.
4. ஸ்ரீ வேதநாத சுவாமிகள் 2002, பதினெட்டு சித்தர்கள் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை.
5. நாராணன், க., (1988), சித்தர் தத்துவம், தமிழ் புத்தகாலயம், சென்னை.